# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 36 | January 2024 | Issue 1




மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் அவர்களை 11.1.2024 அன்று விருதுநகரில் சந்தித்து வருவாய்த்துறை அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து பேசப்பட்டது.




13.12.2023 அன்று ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகள்


தனிப்பிரதி விலை ரூ.10/-
*Per Copy Rs.10/-*

ஆண்டு சந்தா ரூ.120/-
*Annual Subscription Rs.120/-*




02.12.2023 அன்று ஈரோட்டில் நடைபெற்ற வைர விழா ஆண்டு மாவட்ட மாநாட்டில் மாநில செயலாளர் பி.செந்தில்குமார் மேனாள் பொதுச் செயலாளர் கே.ராஜ்குமார், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர்




17.12.2023 அன்று நடைபெற்ற காஞ்சிபுரம் மாவட்ட வைரவிழா மாநாட்டில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு உரையாற்றினர்




விழுப்புரம் மாவட்டத்தில் சங்கத்தின் வைர விழா மாவட்ட மாநாடு மிக எழுச்சியோடு நடைபெற்றது மாவட்டத் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம் பங்கேற்றார். மாவட்ட, வட்ட பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்

# ஒற்றுமைக்கும் விடாமுயற்சிக்கும் கிடைத்த பரிசு: கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

## (பெற்ற பணியிடங்களும், பாதுகாக்கப்பட்ட பணியிடங்களும்)

இந்திய நாட்டிற்கே முன்னோடியாக தமிழகத்தில் மகளிருக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கும் திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான அரசாணை கடந்த 10.7.2023 அன்று வெளியிடப்பட்டது. இச்சிறப்புத் திட்டத்தை செயலாக்கம் செய்திட பல்வேறு துறைகள் பரிசீலனை செய்யப்பட்டு, வருவாய்த்துறை வசம் இப்பெரும் பொறுப்பு வழங்கப்பட்டது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் இரவு பகலாக மேற்கண்ட சீரிய பணியின் காரணமாக இத்திட்டத்தில் இரண்டே மாதங்களில் 1 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது பெரும் சாதனையாகவே பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 15.9.2023 அன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கினார்.

இத்திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்ட இரண்டு தினங்களில், இதற்கான உரிய பணியிடங்களை வட்ட, கோட்ட, மாவட்ட அளவில் ஏற்படுத்த தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முறையீடு செய்யப்பட்டு உரிய காலத்தில் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இதுதொடர்பாக அரசு உயர் அலுவலர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் என அனைத்து நிலைகளிலும் முறையீடு செய்யப்பட்ட நிலையில், கூடுதல் பணியிடங்கள், உரிய கால அவகாசம், நிதி உள்ளிட்டவை வழங்காததால் வருவாய்த்துறை அலுவலர்கள் சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளாகினர்.

இதனிடையே தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் அழுத்தத்தின் காரணமாக இத்திட்டத்திற்கு புதிக பணியிடங்களை ஏற்படுத்தவும், ஆனால் அதற்கு மாற்றாக வருவாய் நீதிமன்றம், நில அளவைத்துறையின் சில பணியிடங்கள், நகர்ப்புற நில உச்ச வரம்பு அலுவலக பணியிடங்கள் கலைக்க உள்ளதாக கிடைத்த செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஏற்கனவே பணி நெருக்கடி அதீதமாக உள்ள சூழலில் வருவாய்த்துறை எந்த ஒரு பணியிடத்தையும் கலைக்கலாகாது என்ற அடிப்படையில், கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் கூட்டம், 26.10.2023 அன்று மாலை தமிழகம் முழுவதும் வருவாய்த்துறை அலுவலர்கள் ஒரு மணி நேரம் முன்னதாக அலுவலகங்களிலிருந்து வெளிநடப்பு செய்து மாவட்ட தலைநகரில் ஆர்ப்பாட்டம் செய்வதெனவும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பணிகளை முழுமையாக

புறக்கணிப்பதும் எனவும், 21.11.2023 அன்று அனைத்து அலுவலர்களும் ஒரு நாள் ஒட்டுமொத்தமாக தற்செயல் விடுப்பு எடுப்பது எனவும் முடிவு செய்தது.

மாநிலம் முழுவதும் மாநில, மாவட்ட மற்றும் வட்ட நிருவாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்களின் பங்களிப்பின் காரணமாக பணி புறக்கணிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்திற்கான பணிகள் எழுச்சியாக நடைபெற்ற நிலையில், 25.10.2023 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூத்த அலுவலர்கள், நிதித்துறை செயலாளர் ஆகியோர் சுமார் 2 மணிநேரம் ஆலோசனை செய்து, வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகளை ஏற்பதாகவும், படிப்படியாக ஆணைகள் வழங்குவதாக தெரிவித்து, போராட்டங்களை ஒத்தி வைக்க கேட்டுக் கொண்டனர்.

அன்றைய தினமே இரவு மாநில நிருவாகிகளின் அவசர கூட்டம் காணொளி காட்சி வாயிலாக கூட்டப்பட்டு, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. உயர் அலுவலர்களின் அழைப்பின் பேரில் 26.10.2023 அன்று நிதித்துறை செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களை சந்தித்து கோரிக்கைகள் குறித்து பேசப்பட்டது.

அதன்பின்பாக பல்வேறு காரணிகளால், அரசாணை தாமதம் ஏற்பட்டாலும் தற்போது 109 வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு துறைகளில் புதிய பணியிடங்கள் என்பதே இல்லை. அல்லது புதிய பணியிடங்கள் அனைத்தும் வெளிமுகமை முறையில் நிரப்பப்படும் சூழலில், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் இயக்க நடவடிக்கை மற்றும் தொடர் முயற்சிகளின் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பணியிடங்கள் தற்போது நிரந்தர அடிப்படையில் பெறப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களின் உருக்கு போன்ற ஒற்றுமைக்கு கிடைத்த பரிசாகவே இதனைக் கருத வேண்டும்.

1990ஆம் ஆண்டு; 29 நாட்கள் வீரம்செறிந்த போராட்டத்தின் வாயிலாக 222 மண்டல துணை வட்டாட்சியர் பணியிடங்கள் பெற்றோம். அதற்கு இணையாக தற்போது இயக்க நடவடிக்கைகளின் வாயிலாக 109 பணியிடங்களை பெற்றுள்ளோம்.

இதுமட்டுமின்றி, மக்கள் தொகை அதிகமாக உள்ள நகரப் பகுதிகளில் பொதுமக்களின் சான்றிதழ் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்கிட கூடுதல் பணியிடங்களை விரைவில் வழங்க உள்ளதாக அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. பிற துறைகளில் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் வெளிமுகமை முறையில் நிரப்பப்படும் நிலையில், நமது ஒன்றுபட்ட சக்தியின் காரணமாக வருவாய்த்துறையில் அலுவலக உதவியாளர் காலியிடங்களை நிரந்தர அடிப்படையில் நேரடியாக நிரப்பிட சமீபத்தில் ஆணைகள் பெற்றுள்ளோம்.

நமது விடாமுயற்சியின் காரணமாக அனைத்து வாழ்வாதாரக் கோரிக்கைகள் மீதும் விரைவில் ஆணைகள் பெறுவோம் என்ற நம்பிக்கையும் உத்வேகமும் பெற்றுள்ளோம்.

ஜாதி, மதம், பிரிவு உள்ளிட்ட வேற்றுமைகள் கடந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டால் நம்மால் இயலாதது எதுவுமில்லை என்பது திண்ணம். ■

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

## THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

## *மாநில மையம்*

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

நாள்: 13.12.2023

## மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள் - இராமநாதபுரம்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் 13.12.2023 அன்று இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை PSM கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். மத்திய செயற்குழு கூட்டத்தின் முதல் நிகழ்வாக சங்கக் கொடியினை மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் ஏற்றி வைத்தார். இராமநாதபுரம் மாவட்டத் தலைவர் திரு.எஸ்.பழனிக்குமார், வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை மாநிலத் துணைத்தலைவர் திரு.து.செந்தூர்ராஜன் முன்மொழிந்தார்.இக்கூட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் மற்றும் மாநில செயலாளர் திரு.எஸ்.பார்த்திபன் ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இச்செயற்குழு கூட்டத்தில் இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் நீங்கலாக, 36 மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடந்த 05.08.2023 அன்று சிவகங்கையில் நடைபெற்ற மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைரவிழா மாநில மாநாடு 2023 டிசம்பர் 22 மற்றும் 23 ஆகிய தினங்களில் சென்னையில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு மாநில மாநாட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டிய 09 ஆண்டுகளுக்கான ஸ்தாபன அறிக்கை, நிதிநிலை அறிக்கை மற்றும் சங்க சட்ட/திட்ட விதிகள் திருத்தம் ஆகியவற்றின் மீது ஒப்புதல் பெறும் நோக்கத்திற்காக இம்மத்திய செயற்குழு கூட்டப்பட்டுள்ளது என்றும், எனவே மத்திய செயற்குழு கூட்டத்தினை இராமநாதபுரம் மாவட்டத்தில் நடத்திட உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறு மாநில மையத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையில், ஸ்தாபனத்தின் 60ஆம் ஆண்டு

தொடக்கத்தினை குறிக்கும் வகையில் 60 அடி உயரக் கொடிக் கம்பத்தினை நிறுவி மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்துள்ள இராமநாதபுரம் மாவட்டத் தலைவர் தோழர்.எஸ்.பழனிக்குமார் தலைமையிலான மாவட்ட நிர்வாகிகளை வெகுவாக பாராட்டினார். நமது இயக்க நடவடிக்கைகளை 60ஆம் ஆண்டில் சிறப்பான முறையில் மாவட்டங்களில் செயல்படுத்தி வரும் 38 மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாநில மையத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மேலும் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தொலைத் தொடர்பு உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத கால கட்டத்தில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து நமது முன்னோர்கள் செய்திட்ட தியாகங்களின் மூலம் ஸ்தாபனம் ஆள்போல் தழைத்து வளர்ந்து, மாநிலம் முழுமைக்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பாதுகாப்பு கேடயமாக விளங்கி வருகிறது என்றும், இதற்கு காரணமான நமது அமைப்பின் முன்னோர்களை இந்நாளில் நினைவு கூறுவது நமது தலையாய கடமை எனவும் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் வைரவிழா மாநில மாநாடு நடைபெறவுள்ளது எனவும், மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில மையம் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருவதாகவும், மேலும் மாநில மாநாட்டில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் உயர் அலுவலர்களின் வருகை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு முதலமைச்சரின் வருகை எதிர்நோக்கப்படுவதாகவும், தெரிவித்தார். வைரவிழா மாநாட்டிற்கான அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் தலா 100 எண்ணிக்கையில் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேலும் வைரவிழா மாநாட்டில் வெளியிடும் பொருட்டு வைரவிழா ஆண்டு மலர் தயாரிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும், மலர் வெளியீட்டில் பெரும்பாலான மாவட்டங்கள் தங்களது பங்களிப்பினை சிறப்பான முறையில் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வைரவிழா மாநாட்டிற்கான போஸ்டர்கள் அச்சடிக்கப்பட்டு ஒரு வட்டத்திற்கு நான்கு என்ற எண்ணிக்கையில் மாவட்டங்களுக்கு இரண்டு தினங்களில் அனுப்பி வைக்கப்படும் எனவும், வைரவிழா மாநில மாநாட்டிற்கு முன்பாக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட / வட்ட மாநாடுகளை நடத்திடுமாறு மாநில மையத்தின் சார்பில் அறிவுறுத்தப்பட்டதன்படி இதுவரை 32 மாவட்டங்களில் வட்ட மாநாடுகளும், 29 மாவட்டங்களில் மாவட்ட மாநாடுகளும் சிறப்பான முறையில் நடத்தி முடிக்கப்பட்டு தீர்மானங்களை இயற்றி மாநில மையத்திற்கு அளித்துள்ளன என்றும், திருவள்ளூர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 05 மாவட்டங்களில் வட்ட / மாவட்ட மாநாடுகளும், நாமக்கல், நீலகிரி, அரியலூர் மற்றும்

விருதுநகர் ஆகிய 04 மாவட்டங்களில் மாவட்ட மாநாடுகளும் நடத்தப்பட வேண்டியுள்ளது என்றும், எனவே மேற்கண்ட 09 மாவட்டங்களிலும் உறுதியளித்தபடி வட்ட/மாவட்ட மாநாடுகளை நிறைவு செய்து மாநில மையத்திற்கு தீர்மானங்களை வழங்கிட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

வைரவிழா மாநில மாநாடு மாவட்டங்களில் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும், மாநாட்டிற்கான கோரிக்கைகள் இச்செயற்குழு கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டு மாநாட்டில் தாக்கல் செய்யப்படும் என்றும், மேலும் வைரவிழா மாநில மாநாட்டு நிதி நிலுவை வைத்துள்ள மாவட்டங்கள் மாநாட்டிற்கு முன்பாக நிதி இலக்கினை முழுமையாக நிறைவு செய்திட வேண்டுமெனவும் தெரிவித்தார். நமது ஸ்தாபனத்தின் மீது அரசுக்கு நல்ல பார்வை உள்ளதாகவும், அதற்கேற்றவாறு மாவட்ட மையங்களின் செயல்பாடுகள் அமைந்திட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் 2009-ம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை துணைஆட்சியர் பட்டியல் திருத்தம் செய்து வெளியிடப்பட்டதால் தமிழகம் முழுவதும், 45 துணை ஆட்சியர்கள் வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள நிகழ்வு பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த வருவாய்த்துறை அலுவலர்களிடமும் மனவலியை ஏற்படுத்தியுள்ளது என்றும், எனவே பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவருக்கும் உரிய தீர்வினை பெற்றுத் தருவதற்கு மாநில மையம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும், இதன் காரணமாக இவ்வினத்தில் ஒரு மாத காலத்திற்குள் உரிய தீர்வு எட்டப்படும் நிலை உருவாகியுள்ளதாகவும், உறுதிபட தெரிவித்தார்.

மேலும் மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக துணை வட்டாட்சியர்/ வட்டாட்சியர்; பட்டியல் திருத்தம் செயய் ப்பட்டதால் 100-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவ்வினத்தில் எந்தவொரு அலுவலரும் பாதிக்காத வகையில் விதித்திருத்த அரசாணை வெளியிட நடவடிக்கை எடுத்திடுமாறு அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வலியுறுத்தப்பட்டு வந்ததன் அடிப்படையில் இக்கோப்பு தற்போது நிதித்துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், மாநில மாநாட்டிற்கு முன்பாக இவ்வினத்தில் விதிதத்திருத்த அரசாணை பெறும் நோக்கில் மாநில மையத்தின் சார்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நினைவு கூர்ந்தார். மேலும் மாநில மையத்தின் இடைவிடாத, தொடர்ச்சியான நடவடிக்கைகளின் வாயிலாகவே இதனை சாத்தியப்படுத்திட இயலும் என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் மகளிருக்கு மாதந்தோறும், ரூ.1000/- உதவித்தொகை வழங்கிடும் பொருட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்றொரு புதியத் திட்டம் கடந்த 15.09.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் தொடங்கி

வைக்கப்பட்டு தற்போது ஒரு கோடி மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்போது இத்திட்ட பணிகள் முழுமையாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வட்ட / மாவட்ட அளவில் புதிய பணியிடங்கள் வழங்கிடக் கோரி மாநில மையத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் விரிவான முறையீடு அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், மேலும் மாண்புமிகு சிறப்புத்திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் மற்றும் நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன்,இ.ஆ.ப., ஆகியோரிடம் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது என்றும், எனவே இத்திட்டத்திற்கான புதிய பணியிடங்கள் விரைந்து பெறப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது பல்வேறு நிலைகளில் பணியிட பாதிப்பு அதிகமாக உள்ளதென்றும், இதனை சமாளித்திட அமைப்பை மேலும் வலிமைப்படுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட அமைப்பில் நாளது தேதிவரை 10353 உறுப்பினர்களுக்கான இணைப்புக்கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனை துரிதப்படுத்தி ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா, உள்ளிட்ட நிதி நிலுவைகள் ஆகியவற்றை வைரவிழா மாநில மாநாட்டிற்கு முன்பாக செலுத்திட மாவட்ட மையங்கள் முன்வர வேண்டு மென்றும் குறிப்பிட்டார்.

தற்போது எதிர் கொண்டுள்ள கோரிரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் நிரந்தர தீர்வு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு புதிய பணியிடங்கள் பெறுதல், அலுவலக உதவியாளர் இரவுக்காவலர் மற்றும் மசால்சி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவது, இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதிதிருத்த அரசாணை, வாக்காளர் பட்டியல் சிறப்பு பணியிடங்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை பட்டியல் தீர்வு, வருவாய்த்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பிறதுறை பணியிடங்களை பாதுகாத்தல் மற்றும் புதிய அலகுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளில் விரைவில் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல், இ-அலுவலகம் நடைமுறைபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டிய அவசியம் குறித்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மீது தமிழக அரசின் நிலைபாடு ஆகியவை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மத்திய செயற்குழு கூட்டத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டத் தலைவர் திரு.எஸ்.பழனிக்குமார், மாவட்டச் செயலாளர் திரு.எம்.ஏ.ஜமால் முகமது மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு.க.செல்லப்பா உள்ளிட்ட அனைத்து மாவட்ட

நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் வெகுவாக பாராட்டினார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக எதிர்வரும் வைரவிழா மாநில மாநாட்டில் தாக்கல் செய்திடும் பொருட்டு, கடந்த 2014 ஆகஸ்ட் 01 மற்றும் 02 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற 15-ஆவது மாநில மாநாட்டிற்கு பின்னர் 09 ஆண்டுகளுக்கான ஸ்தாபன அறிக்கையினை செயற்குழுவில் தாக்கல் செய்தார். மதுரையில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்கு பின்னர் கடந்த 09 ஆண்டுகளில் மாநில மையத்தின் சிறப்பான செயல்பாடுகளின் மூலம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் நலன் சார்ந்த பல்வேறு அரசாணைகள் பெறப்பட்டுள்ளது என்றும், துறைவாரி சங்கங்களில் நமது ஸ்தாபனத்தைப் போன்று தொடர்ச்சியான இயக்க நடவடிவக்கைள் வேறு எந்த அமைப்புகளிலும் மேற்கொள்ளப்படுவது இல்லை என்றும், இதன் காரணமாகவே வியத்தகு சாதனைகளுடன் நமது அமைப்பு கடந்த 60 ஆண்டுகளில் ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

60ஆம் ஆண்டு வைரவிழா மாநாட்டினை மிகச் சிறப்பாக சென்னையில் நடத்திடும் பொருட்டு மாநில மையத்தின் சார்பில் அனைத்து பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருவதாகவும், வைரவிழா மாநில மாநாட்டில் தீர்மானம் இயற்றிட ஏதுவாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்கிட கோரிக்கை வைத்து அனைத்து மாவட்டங்களிலும் தனித் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது சிறப்பான நிகழ்வு என்றும், இதன் மூலம் நமது நீண்ட நாள் கோரிக்கையினை அரசிடம் கொண்டு சேர்ப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் எனவும் உறுதிபட தெரிவித்தார். மேலும் வைரவிழா மாநில மாநாட்டிற்கு முன்பாக அனைத்து மாவட்டங்களிலும் வட்ட/மாவட்ட மாநாடுகளை நிறைவு செய்திடுமாறும், மாநாடுகளில் பொதுமக்கள் நலன் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்திடுமாறும், இதன் மூலம் பொதுமக்களுக்கும், நமது அமைப்பிற்கும் இடையேயான நெருக்கம் அதிகரித்திட வாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரிவித்தார்.

கடந்த கால நடவடிக்கைகளை பொறுத்த அளவில் கடந்த 05.08.2023 அன்று சிவகங்கையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான இயக்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 16.08.2023 அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர்; இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார்ஜயந்த்,இ.ஆ.ப. மற்றும் கூடுதல் ஆணையர், (வருவாய் நிருவாகம்) திரு.பிரகாஷ் கோவிந்தசாமி, இ.ஆ.ப., ஆகியோரிடம் சிவகங்கை மத்திய செயற்குழுக் கூட்ட தீர்மானங்களை வழங்கி அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தப்பட்டது குறித்தும், மேலும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின்

அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்றம் செய்த கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரை அரசியல் தூண்டுதலின் காரணமாக எவ்வித விசாரணையுமின்றி தற்காலிக பணி நீக்கம் செய்த கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு.ஷ்ரவன் குமார் இ.ஆ.ப., என்பவர் மீது நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

சிவகங்கை மத்திய செயற்குழுவிற்கு பின்பாக கடந்த 04 மாதங்களில் 07 முறை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களை சென்னை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் சந்தித்து பட்டதாரி அல்லாதோர் பணியிறக்க பாதுகாப்பு அரசாணை, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்திற்கு புதிய பணியிடங்கள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணை பிறப்பித்திடுமாறு மாநில மையத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளது குறித்தும், மேலும் கடந்த 04.10.2023 அன்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.பெரியகருப்பன் அவர்களை சென்னையில் சந்தித்து அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணியிடங்களில் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த இணைப் பதிவாளர்களை தனி மாவட்ட வருவாய் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளதை இரத்து செய்திடக் கோரி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

கடந்த 30.08.2023 மற்றும் 30.10.2023 ஆகிய தினங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிச் செயலாளர் திரு.ப.உ.சண்முகம்,இ.ஆ.ப., அவர்களை சந்தித்து பட்டதாரி அல்லாதோர் பணியிறக்கப் பாதுகாப்பு அரசாணை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கிடும் திட்டத்திற்கு புதிய பணியிடங்கள் வழங்கிட மறுப்பது உள்ளிட்டவை தொடர்பாக மாநில மையத்தின் சார்பில் விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டுள்ளது குறித்தும், கடந்த 05.08.2023-க்கு பின்பாக 04 மாதங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையைச் சார்ந்த உயர் அலுவலர்களை 15 முறை தொடர்ச்சியாக சந்தித்து பட்டதாரி அல்லாதோர் பணியிறக்கப் பாதுகாப்பு அரசாணை மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டப் பணிகளுக்கு புதிய பணியிடங்கள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகள் தொடர்ச்சியாக காலதாமதம் செய்யப்படுவதைச் சுட்டிக்காட்டி அவற்றின் மீத விரைந்து ஆணைகள் வழங்கிட வலியுறுத்தி முறையீடுகள் அளித்து பேசப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் அலுவலக உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரை 14,000-த்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட நமது அமைப்பில் நாளது தேதி வரை 10353 உறுப்பினர்களுக்கான இணைப்புக் கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே இதனை துரிதபடுத்தி ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா, உள்ளிட்ட நிதி நிலுவைகள் ஆகியவற்றை வைரவிழா மாநில மாநாட்டிற்கு முன்பாக செலுத்திட மாவட்ட மையங்கள் முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் நிரந்தர தீர்வு, அலுவலக உதவியாளர், இரவுக்காவலர் மற்றும் மசால்சி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவது, இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதிதிருத்த அரசாணை, வாக்காளர் பட்டியல் சிறப்பு பணியிடங்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை பட்டியல் தீர்வு, வருவாய்த்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பிறதுறை பணியிடங்களை பாதுகாத்தல் மற்றும் புதிய அலகுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளில் விரைந்து தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல், இ-அலுவலகம் நடைமுறைபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டிய மாநாடாக வைரவிழா மாநில மாநாடு அமைந்திட வேண்டுமென்றும், இதற்கேற்றார் போல் அனைத்து மாவட்ட மையங்களின் செயல்பாடுகளும் சிறப்பான முறையில் அமைந்திட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் எதிர்வரும் வைரவிழா மாநில மாநாட்டில் தாக்கல் செய்திடும் பொருட்டு, கடந்த 2014 ஆகஸ்ட் 01 மற்றும் 02 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற 15-ஆவது மாநில மாநாட்டிற்கு பின்னர் 09 ஆண்டுகளுக்கு உரிய வரவு / செலவு தொடர்பான நிதிநிலை அறிக்கையினை செயற்குழுவில் தாக்கல் செய்தார்.

இம்மத்திய செயற்குழுவில் இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கவில்லை. இதர 36 மாவட்டங்களின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள்/நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள், ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன.

**தீர்மானம் - 01**

இதுவரை மாவட்ட/வட்ட மாநாடுகளை நடத்திடாத 09 மாவட்ட மையங்களும் வைரவிழா ஆண்டு மாநில மாநாட்டிற்கு முன்பாக மாநாடுகளை நடத்தி முடித்து,

மாநாட்டு தீர்மானங்களை மாநில மையத்திற்கு விரைந்து அளித்திட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 02**

வைரவிழா ஆண்டு மாநில மாநாட்டு நிதி இலக்கினை நிறைவு செய்யாத மாவட்ட மையங்கள் மாநில மாநாட்டிற்கு முன்பாக முழுமையாக நிறைவு செய்திடவும், மேலும் 2023-ம் ஆண்டு உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக் குரல் சந்தா உள்ளிட்ட அனைத்து நிதி நிலுவை இனங்களை முழுமையாக நிறைவு செய்திட வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 03**

மாவட்ட நிருவாகிகளின் புகைப்படங்கள், மாவட்ட/வட்டக்கிளை நிருவாகிகளின் பட்டியல்,தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட மைய கட்டடங்களின் புகைப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை 15.12.2023 மாலை 6.00 மணிக்குள் tnroadiamond@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனைத்து மாவட்ட மையங்களும் அனுப்பிட வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 04**

22.12.2023 அன்று நடைபெறவுள்ள பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொதுக்குழு உறுப்பினர்களின் பட்டியல் மற்றும் 23.12.2023 அன்று நடைபெறவுள்ள பொது மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் பட்டியல் ஆகியவற்றை உடன் மாநில மையத்திற்கு அனுப்பி வைத்திட அனைத்து மாவட்ட மையங்களையும் வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 05**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைரவிழா மாநாட்டினை நினைவு கூர்ந்திடும் வகையில் அனைத்து மாவட்ட மையங்களும் வட்ட/நகர/மாவட்டத் தலைநகரங்களில் மாநாடு குறித்து துண்டு பிரசுரம் வெளியிடுதல், தட்டி வைத்தல் மற்றும் சுவர் விளம்பரங்கள் செய்தல் ஆகியவற்றை பொதுமக்கள் அறியும்வண்ணம் பிரதானமான பகுதிகளில் நிறுவி இது தொடர்பான புகைப்படங்களை மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டுமெனவும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 06**

வைரவிழா மாநில மாநாட்டின் கோரிக்கைகள், முன்மொழிவுகள் மற்றும் அமைப்பு விதிகள் திருத்த முன்மொழிவுகள் ஆகியவை பெருவாரியான மாவட்ட மையங்களின் ஆதரவுடன் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் - 07**

பொதுச்செயலாளர் தாக்கல் செய்த கடந்த 09 ஆண்டுகளுக்கான வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கை (சிறு திருத்தங்களுடன்) மற்றும் மாநிலப் பொருளாளர் தாக்கல் செய்த வரவு/செலவு குறித்த கடந்த 09 ஆண்டுகளுக்குரிய நிதி நிலை அறிக்கை ஆகியவை அனைத்து மாவட்ட மையங்களாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பொது மாநாட்டில் தாக்கல் செய்திட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**தீர்மானம் - 08**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைரவிழா பொது மாநாட்டின் வெற்றியின் மூலமே நமது வாழ்வாதாரக் கோரிக்கைகளை முழுமையாக வென்றெடுத்திட இயலும் என்பதால் அனைத்து மாவட்டங்கள் தெரிவித்துள்ள எண்ணிக்கையைவிட கூடுதலான உறுப்பினர்களை பொது மாநாட்டிற்கு அழைத்து வர மாவட்ட மையங்கள் பிரத்யேக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 09**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைரவிழா மாநில மாநாட்டிற்கு முன்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளான பட்டதாரி அல்லாதோர் பணியிறக்கப் பாதுகாப்பு அரசாணை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டப் பணிகளுக்கு புதிய பணியிடங்கள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கைகளின் மீது உரிய ஆணைகள் வழங்கிட தமிழக அரசினை மீண்டும் வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| ஒம்/- | ஒம்/- |
| (சு.சங்கரலிங்கம்) | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர் |
| 82207 61781 | 98432 64332 |

பெறுதல்:-

மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்டபொருளாளர் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்கள்.
நகல்: அனைத்து மாநில நிர்வாகிகள்.

■

# தாமிரபரணிப் பெருவெள்ளம்: அன்றும் இன்றும்

நீராதாரங்களுக்காகத் தாமிரபரணி ஆற்றைச் சார்ந்துள்ள திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதி கனமழையும் பெருவெள்ளமும் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றன. இப்படியான ஒரு காலகட்டத்தில் தாமிரபரணியின் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பது அவசியம்.

முந்தைய மழையைவிட அதிகமா? - மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகிப் பாயும் கடம்பாநதி, குண்டாறு, சித்தாறு, கருப்பாநதி, தேவியாறு, உப்பு ஓடை, ஊத்துமலை ஓடை, பச்சையாறு, கோரையாறு, மணிமுத்தாறு ஆகியன தாமிரபரணியில் கலக்கின்றன. 1916இல் திருநெல்வேலி மாவட்டக் கையேட்டை வெளியிட்ட ஆங்கிலேயர் பேட் (H.R.Pate), தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு பெரும்பாலும் அடிக்கடி நிகழ்கிறது என்று குறிப்பிட்டார். கடந்த இரு நூற்றாண்டுகளில் 1810, 1827, 1869, 1874, 1877 (இருமுறை), 1880, 1885, 1914, 1923, 1925, 1931, 1992 ஆண்டுகளிலும், 1847இல் கோடையிலும் வெள்ளம் ஏற்பட்டன. இந்தியாவில் மழைப்பொழிவு தொடர்பாக 1879இல் எலியட், 1886இல் பிளன்ஃபோர்டு போன்றோர் முன்னெடுத்த ஆய்வுகளிலும் பிரிட்டிஷ், இந்திய அரசுகளின் ஆவணங்களிலும், 1870ஆம் ஆண்டு முதல் சராசரி மழையளவு, வெள்ளத்தின் குறிப்பான மழையளவு தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலையடியில் இருப்பதால் தென்காசி, கடையம், சிவகிரி, அம்பாசமுத்திரம், கடையநல்லூர் பகுதிகள் வடகிழக்கு, தென்மேற்கு என இரு பருவ மழையையும் பெறுகின்றன. இப்பகுதிகளுக்குக் கிழக்கேயுள்ள கோவில்பட்டி, நாங்குநேரி, பாளையங்கோட்டை, கயத்தாறு, ராதாபுரம், குலசேகரப்பட்டினம், சங்கரன்கோவில், கூத்தகுளி, திருவைகுண்டம், காயல்பட்டினம், ஒட்டப்பிடாரம், சாத்தான்குளம், விளாத்திக்குளம், அரசடி, தூத்துக்குடி பகுதிகள் குறைவான மழையைப் பெறுகின்றன. 1870-1914ஆம் ஆண்டுகளில் ஜனவரி\மார்ச், ஏப்ரல்-மே, ஜூன்-செப்டம்பர், அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் முறையே தென்காசியில் 139.192 மி.மீ., 129.54 மி.மீ., 240.03 மி.மீ., 515.366 மி.மீ., தூத்துக்குடியில் 65.024 மி.மீ., 63.246 மி.மீ., 28.194 மி.மீ., 405.13 மி.மீ., மழையும் சராசரியாகக் கிடைத்திருப்பது என்பது, மேற்கிலும் கிழக்கிலும் இருக்கின்ற மழையளவின் வேறுபாட்டைக் காட்டுகிறது.

நெல்லை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்ட 1877இல் 1,190.244மி.மீ., 1902இல் 1,140.714 மி.மீ., 1891இல் 1044.194 மி.மீ., 1896இல் 989.584 மி.மீ., 1892இல் 389.89 மி.மீ., 1876இல் 409.956 மி.மீ., 1890இல் 435.864 மி.மீ., 1914இல் கடையத்தில் 1,898.142 மி.மீ., தென்காசியில் 1,658.366 மி.மீ., அம்பாசமுத்திரத்தில் 1.624.838 மி.மீ., குலசேகரப்பட்டினம், கடையநல்லூர், திருச்செந்தூர், சிவகிரி பகுதிகளில் 1.270 மி.மீ. மழை பொழிந்தது. தற்போதைய வெள்ளத்தில் தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 946.00 மி.மீ., திருச்செந்தூரில் 689 மி.மீ, குலசேகரப்பட்டினத்தில் 330மி.மீ. மழை பொழிந்தது. இப்புள்ளிவிவரங்கள் 1877-1914ஆம் ஆண்டைவிட தற்போது குறைவான மழை பொழிந்திருப்பதைக் காட்டுகிறது.



உருக்குலைந்த ஊர்கள்: 1810 டிசம்பர் 6 தொடங்கி தொடர்ந்து 30 மணி நேரம் பெய்த மழையால் வெள்ளம் ஏற்பட்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்தன. ஆழ்வார்திருநகரியில் 500 வீடுகள் சேதமடைந்தன. 1827 வெள்ளம் மக்களின் நினைவுக்கு எட்டிய எல்லாப் பேரிடர்களையும் விஞ்சியது. வீட்டின் கூரையில் நின்றோர் படகு மூலம் காப்பாற்றப்பட்டனர். இவ்வெள்ளத்தில் திருவைகுண்டத்தில் இருந்த உதவிப் பொறியாளர், அங்கிருந்த கோயில் கோபுரத்தில் மூன்று நாள்கள் சிக்கித் தவித்தார். 1869 நவம்பரில் புயலால் தூத்துக்குடியில் கடல்மட்டம் சாலைவரை உயர்ந்து புதிய கலங்கரை விளக்கமும் ஹரே தீவும் அழிந்தன. அம்பாசமுத்திரம் பாலத்தின் பதினொன்றில் நான்கு வளைவுகளை வெள்ளம் வாரிச் சென்றது. அப்போது கட்டிமுடிக்கப்பட்டு ஐந்து மாதங்களே ஆகியிருந்த திருக்குறங்குடி நம்பியாற்றுப் பாலம் சிறு தடயம்கூட இல்லாமல் அழிக்கப்பட்டது.

1874 நவம்பர் 24 அன்று திடீரெனப் பெய்த மழையால் 26ஆம் தேதி கிருஷ்ணபேரி வாய்க்கால் உடைந்து, நெல்லை நகரத்தில் வெள்ளம் பாய்ந்தது. வெடிக்கும் நிலையில் இருந்த நயினார்குளத்தில் உடைப்பு ஏற்படுத்த எண்ணியபோது, அது தானாகவே உடைந்து வயலிலும் பாய்ந்து, ரயில் நிலையத்துக்கும் பாய்ந்து, பாளையங்கோட்டைக்கும் திருநெல்வேலிக்குமான நிலவியல் தொடர்பை முற்றிலும் துண்டித்தது. திருவைகுண்டத்தில் ஏழு குளங்கள் உடைந்தன. கொரம்பள்ளம் குளம் உடைந்து சுற்றுப்புறங்கள் மூழ்கின. 1877 டிசம்பர் 5 அன்று தொடங்கிய மழையால் 6ஆம் தேதி பாளையங் கால்வாயில் காலை 10 அடி உயரத்துக்கும், மதியம் 2 மணிக்கு 27 அடி உயரத்துக்கும் வெள்ளம் பாய்ந்ததால் இரவில் நூற்றுக்கணக்கானோர் வீடற்றோராகினர். நாங்குநேரி, ராதாபுரம் பகுதிகளில் சுமார் 200 குளங்களும் உடைந்தன. 1895 டிசம்பர் 29 நள்ளிரவில் திருநெல்வேலி பாலத்தில் சென்ற 27 அடி வெள்ளத்தால் ஆற்றுப்படுகையின் பெரிய மண்டபத்தில் உறங்கிக்கொண்டிருந்த 13 பேர் உயிரிழந்தனர்; ஒருவர் தப்பினார். ■

ABSTRACT

“**Kalaignar Magalir Urimai Thittam** - Sanction of 94 Head Assistant / Deputy“Tahsildar posts in the Sub Collector/ Revenue Divisional Offices, 3 Tahsildar (SSS)“posts at Taluk level and 7 Deputy Tahsildar post in Taluk Offices for“Implementation of Kalaignar Magalir Urimai Thittam - Orders - Issued.

**Revenue and Disaster Management Department**
**“Disaster Management Wing, D.M.1(2) section**

G.O.(Ms) No.01

Dated:02.01.2024
சோபகிருது வருடம், மார்கழி-17
திருவள்ளுவராண்டு 2054
Read:

01. G.O.(MS)No.15, Special Programme Implementation Department,“Dated 10.07.2023.

2. G.O.(MS)No.428, Revenue and Disaster Management [D.M.1(2)]“Department, Dated 10.08.2023.

3. G.O.(Ms)No.548, Revenue and Disaster Management [D.M.1(2)] Department, Dated 08.11.2023.

4. From the Additional Chief Secretary / Commissioner of Revenue Administration letter No.Rev.Aud.5(1)/AT-01/01/2023, Dated 10.08.2023.

5. From the Commissioner (Social Security Schemes), Chennai letter“No.RA11 (1)/AT-01/01/2023, Dated 08.09.2023, 30.10.2023 and“09.11.2023.

**ORDER:**

In the Government order first read above, orders and detailed guidelines were“issued for implementation of "Kalaignar Magalir Urimai Thittam".

2. In the Government order second read above, Government have“sanctioned 14 new posts in Office of the Additional Chief Secretary / Commissioner“of Revenue Administration for smooth implementation of the "Kalaignar Magalir“Urimai Thittam".

3. In the letters fifth read above, the Additional Chief Secretary /“Commissioner of Revenue Administration has stated as follows:

i. As per the G.O.(Ms) No.15, Special Programme Implementation Department,“Dated 10.07.2023. Revenue and Disaster Management Department has to“implement the "Kalaignar Magalir Urimai Thittam" and the Commissioner“(SSS) is the Implementation Authority

The "Kalaignar Magalir Urimai Thittam" is one of the innovative schemes of the Government and the number of beneficiaries is around 1.06 crores. The number of appeals received from the aggrieved applicants is approximately 11.85 Lakhs and needs enormous work force for the smooth processing of the same. Hence, the Social Security Scheme unit at District level requires strengthening to handle this flagship Scheme and the implementation of the new scheme will be feasible only if additional staff are sanctioned as“mentioned below:-

a. The post of 8 Social Security Scheme Tahsildars positions are required for the newly formed taluks

b. The post of 38 Head Assistants/Deputy Tahsildars in 38 District Collectorate's is necessary as the redressal of grievances of the general public is handled by them and the expected workload pertaining to compilation of data, monitoring of addition, deletion and“modifications involved in this scheme will be more.

c. The post of 94 Head Assistants/Deputy Tahsildars in 94 Divisions in all the Districts is essential for assisting in the periodical updation of“eligible cases, deletion of ineligible cases and appeal verification processes carried out by the Appellates (Revenue Divisional officers) at divisional level. In addition to the above mentioned responsibilities the complaints are also handled at Divisions and the redressal of the same are also to be handled by them.

d. Since the Taluks in Municipal Corporation areas have enormous population due to Urbanisation, it is crucial to approve the post of 53 Deputy Tahsildars in the Taluks as it is necessary for assisting the Appellates related to "Kalaignar Magalir Urimai Thittam" processes.

e. The post of 32 Deputy Tahsildars in the taluks located in Hill areas needs to be sanctioned as the population is widely scattered over a span of large area and considering the difficulties in approaching the remote villages.

f. The post of 7 Deputy Tahsildar are requested for the Taluks where No Zonal Deputy Tahsildar posts are sanctioned till

g. The sanctioning of 91 Deputy Tahsildar posts in Taluks with more number of beneficiaries is imperative considering their responsibility to manage the data related to addition, deletion, modifications and cases referred for field verifications.

iii. The Social Security Schemes covering about 35.50 lakh beneficiaries and the Chief Minister's Uzhavar Padhukappu Thittam (CNUPT) covering around 2.83 crore beneficiaries are being handled by the Special Tahsildars of Social Security Schemes. The present set-up in District Collectorates, Divisional offices and Taluk offices will not be able to handle the "Kalaignar Magalir Urimai Thittam" scheme work.

4. The Additional Chief Secretary / Commissioner of Revenue Administration has, therefore, requested orders for administrative approval and sanction/creation of the following 323 new posts of Head Assistant / Deputy Tahsildar in Districts, Sub Collector / Revenue Divisional Offices and Tahsildar in Taluk offices for"smooth implementation of the "Kalaignar Magalir Urimal Thittam".

| S. No | Districts | Name of the Post Sanctioned | |
|---|---|---|---|
| | | Tahsildars (Social Security Scheme) | Head Assistant Deputy Tahsildars |
| 1 | Taluks that require Tahsildars (SSS) | 8 | |
| 2 | District Headquarters | | 38 |
| 3 | Sub Collector/ Revenue Divisional offices | | 94 |
| 4 | Taluks in Corporation / Peripherals | | 53 |
| 5 | Taluks in Hill Areas | | 32 |
| 6 | Taluk where Zonal Deputy Tahsildar post is not sanctioned | | 7 |
| 7 | Taluks with more No. of Beneficiaries | | 91 |
| | TOTAL | Total No. of Posts - 8+315=323 | |

5. The Government, after careful examination of the proposal of the Additional Chief Secretary/ Commissioner of Revenue Administration, hereby issue orders as follows:-

I. Sanction 8 Tahsildar (SSS) post at Taluk not having Tahsildar (SSS) 94 Head Assistant / Deputy Tahsildar Post in Sub-Collector / Revenue Divisional Offices and 7 Deputy Tahsildar Post in Taluks having no sanctioned Zonal Deputy Tahsildars post and the mode of appointment to fill up the posts in the above offices for smooth implementation of the "Kalaignar Magalir Urimal Thittam" as detailed below:-

| S. No. | Name of the Post | No. of the Posts | Post to be sanctioned in which Taluk/ Sub-Collector / Revenue Divisional Offices | Mode of appoint ment | Level in Pay matric in case of regular appointment |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | Special Tahsil dar (SSS) | 8 | 1. Kurinjipadi, Cuddalore Dt.<br>2. Karimangalam,Dharmapuri Dt.<br>3. Thalavadi, Erode Dt.<br>4. Kalvarayan Hills, Kallakurichi Dt.<br>5. Kadavur, Karur Dt.<br>6. Kholli Hills, Namakkal Dt.<br>7. Karambakudi, Pudukottal Dt.<br>8. Madhavarm, Chennai Dt. | Regular Time Scale or Retired Tahsildar from any Unit of Revenue Department | Level 20- Rs.37.700 - 1,38,500 |
| 2 | Head Asst./ Deputy Tahsil dar | 94 | Sub-Collector / Revenue Divisional Offices | Regular Time Scale of Deputy Tahsildar from any Unit of Revenue Dept. | Level 18- Rs.36,900- 1,35,100 |
| 3 | Deputy Tahsil dar | 7 | Taluks having no sanctioned Zonal Deputy Tahsildar post | Regular Time Scale of Level 18- Tahsildar from any Unit of Revenue Dept. | Rs.36,900- 1,35,100 |

ii. Sanction is accorded for a sum of Rs.11,25,40,000/- (Rupees Eleven Crore Twenty Five lahks and Forty Thousand only) (Tentative recurring salary) for the current year (December 2023 to March 24) and next year (2024 - 2025) for smooth implementation of the "Kalaignar Magalir Urimai Thittam".

iii. Sanction is accorded for a sum of Rs.30,00,000/- (Rupees Thirty Lakhs only) for 1.T peripherals (40,000x75 persons -30 lakhs) and Rs.15,00,000/- (Rupees Fifteen Lakhs only) for Office contingencies (20,000x75 persons = 15 lakhs) for smooth implementation of the "Kalaignar Magalir Urimai Thittam".

6. The Additional Chief Secretary /Commissioner of Revenue Administration is directed to take necessary action accordingly.

7. The amount sanctioned in paragraph 5 above shall be debited to the following heads of account:-

| S.No. | Heads of Account | Amount in Rs. |
|---|---|---|
| 1. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -301-Salaries-01-Pay. [IFHRMS DPC 2053 00 094 AB 30101] | Rs.22,40,000 |
| 2. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -301-Salaries-02-Pay. [IFHRMS DPC 2053 00 094 AB 30102] | Rs.18,000 |
| 3. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -301-Salaries-06-Pay. [IFHRMS DPC 2053 00 094 AB 30106] | Rs.1,69,000 |
| 4. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -301-Salaries-30108 - City Compensatory Allowance [IFHRMS DPC 2053 00 094 AB 30108] | Rs.24,000 |
| 5. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -303-Dearness Allowance 01 -Dearness Allowance [IFHRMS DPC 2053 00 094 AB 30101] | Rs.10,31,000 |
| 6. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -305- Office expenses-02-other contigencies [IFHRMS DPC 2053 00 094 AB 30102] | Rs.3,00,000 |

| | | |
|---|---|---|
| 7. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AB Taluk establishment -376-Computer and accessories - 01-Purchase [IFHRMS DPC 2053 00 094 AB 37601] | Rs.6,00,000 |
| 8. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 301-Salaries -01-Pay [IFHRMS DPC 2053 00 094 AA 30101] | Rs.1,38,75,000 |
| 9. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 301-Salaries -02-Medical Allowance [IFHRMS DPC 2053 00 094 AA 30102] | Rs.1,13,000 |
| 10. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 301-Salaries -06- House Rent Allowance [IFHRMS DPC 2053 00 094 AA 30106] | Rs.9,78,000 |
| 11. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 301-Salaries -08- City Compensatory Allowance [IFHRMS DPC 2053 00 094 AA 30108] | Rs.1,51,000 |
| 12. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 303-Dearness Allowance 01- Dearness Allowance [IFHRMS DPC 2053 00 094 AA 30301] | Rs.63,83,000 |
| 13. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA- Sub divisional establishment 305-Office expenses 02- Other contingencies [IFHRMS DPC 2053 00 094 AA 30502] | Rs.12,00,000 |

| | | |
|---|---|---|
| 14. | 2053-00-District Administration-094-Other Establishment-State's Expenditure-AA-Sub divisional establishment 376-Computer and accessories 01- Purchase [IFHRMS DPC 2053 00 094 AA 37601] | Rs.12,00,000 |


8. Necessary additional funds of Rs.2,94,82,000/- will be provided in Revised Estimate Final Modified Appropriation 2023-2024. The Additional Chief Secretary/Commissioner of Revenue Administration is authorized to draw and disburse the amount. This expenditure should be brought to the notice of Legislative Assembly by the way of Specific inclusion in the Supplementary Estimates 2023-2024. The Additional Chief Secretary/ Commissioner of Revenue Administration is directed to include the expenditure sanctioned above, while sending the Budget Proposal for Revised Estimate / Final Modified Appropriation 2023-2024 and also send necessary Explanatory Notes to Finance (Revenue) Department for including the above expenditure in the supplementary Estimates 2023-2024 without fail.

9. This order issues with the concurrence of the Finance Department vide its e-file Note No.11217/Finance (Revenue/CMPC)/2023, dated: 02.01.2024 with ASL No.1607 (one thousand six hundred and seven) and PSL No.202401PSL0001. (IFHRMS ASL No.2024011607).

(BY ORDER OF THE GOVERNOT)

V. RAJARAMAN

SECRETARY TO GOVERNMENT




தமிழ்நாடு
வருவாய்துறை
அலுவலர்
சங்கத்தின்
வைரவிலா
ஆண்டை
முன்னிட்டு
மதுரை மாவட்ட
தோழர்
முனியசாமி
தீட்டிய ஓவியம்

**By: Speed Post/e-mail**

भारत निर्वाचन आयोग सचिवालय

**SECRETARIAT OF THE ELECTION COMMISSION OF INDIA**

निर्वाचन सदन, अशोक रोड, नई दिल्ली-110001

NIRVACHAN SADAN, ASHOKA ROAD, NEW DELHI-110001.

No.437/1/TN/2024/(T&P)/SS-I

Dated: 16th January, 2024

To

The Chief Electoral Officer,
Tamil Nadu,
Chennai.

Subject:- **General Elections to Lok Sabha, 2024 –Transfer/ Posting of Officers connected with conduct of elections– Election Commission's instructions- regarding.**

Sir,

I am directed to refer to your letter no.7400/2023-2, dated 22.12.2023 on the subject cited and to inform you that the Commission has allowed BDOs, Tahsildars and Sub-Inspectors of Police who are district cadre officers to remain posted within the district, but they should be posted out from the Assembly Constituency where their home town is located or where their tenure exceeds 3 years out of the last 4 years.

Yours faithfully,

**(M. L. MEENA)**
**UNDER SECRETARY**

**Copy to:**

1. Code of Conduct Section for their information.

# மாவட்ட மாறுதல்கள் இரத்து

2019 நாடாளுமன்றத் தேர்தலின் போது வட்டாட்சியர்கள் & வருவாய்த்துறை அலுவலர்களை மாவட்டத்திற்கு வெளியே மாறுதல் செய்தது தொடர்பாக, போராட்டங்கள் நடத்தியும் புதுடெல்லி தலைமைத் தேர்தல் ஆணையர் & உயர் அலுவர்களை நேரில் சந்தித்தும், திருத்திய ஆணைகள் பெற்றோம். தற்போது 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இதன் அடிப்படையிலும், TNROA முறையீட்டின் பேரிலும் இந்திய தேர்தல் ஆணையம், மாவட்ட மாறுதல் ஆணைகளை இரத்து செய்துள்ளது. இதற்கு முழு முயற்சி எடுத்த தமிழ்நாடு முதன்மைத் தேர்தல் அலுவலர் உள்ளிட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மாநில மையம்,
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் (TNROA)

**Revised) Circular No. 02 / 2018**
**Roc. No.Ser 3 (1) / 01-19010/397/ 2023**

Revenue Administration
Disaster Managerent and
Mitigation Department,
Chepauk, Chennal-5
Dated:05-01-2024

**CIRCULAR**

PRESENT: Thiru.S.K.PRABAKAR, I.A.S.

Additional Chief Secretary /
Commissioner of Revenue Administration

| | |
|---|---|
| Sub: | Public Services - District Revenue Units“- Officers from the cadre of Tahsildar to Junior Assistant Posting of officers in sensitive posts while grave charges are pending - Certain instructions issued REVISED instructions issued. |
| Ref:- | This office Circular No.02/2018 in Roc No Ser 3 (11/3577/2018, dated 14.10.2018 |

Departmental disciplinary proceedings under Rule 17 (b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules are initiated against the officers for the lapses / irregularities committed by them which warrant imposition of major punishment such as Dismissal / Removal / Compulsory Retirement and Reduction in Rank. At the end of such disciplinary proceedings, the delinquent officer may be imposed with any of the major punishment.

2) However, it has been brought to the notice of Additional Chief Secretary / Commissioner of Revenue Administration that persons, against whom grave charges under Rule 17(b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules are pending, are being posted in sensitive posts such as Taluk Tahsildar, Zonal Deputy Tahsildar, Revenue Inspector (Mines, Civil Supplies etc.) in a routine manner without considering the pendency of grave charges and its consequences.

3) This practice is considered to be against the interest of healthy administration and may have negative impact on the morale of other officers. Posting of persons with doubtful integrity in sensitive posts may lead to their courageous indulgence in unlawful / corrupt activities with the perception that they may be awarded with major punishments such as Dismissal / Removal from Service or Compulsory Retirement.

4) Therefore, the following revised instructions are issued for strict observance:-

i. The officers who are facing grave charges under Rule 17 (b) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules shall not be posted in sensitive / hypersensitive posts in their cadre as listed below:-

| **Cadre** | **Posts that should be deferred until finalisation of disciplinary proceeding** |
|---|---|
| Tahsildar | Taluk Tahsildar posts, Posts having connection with Excise, Civil Supplies subjects, etc. |
| Deputy Tahsildar | Zonal Deputy Tahsildar, Taluk Supply Officer, etc |
| Assistant | Special Revenue Inspector (Mines)“ |
| Junior Assistant | Special Revenue Inspector (Civil Supplies) |

The post of Firka Revenue Inspector is excluded the above list provided the District Collector/Competent authority should ensure that there is no Vigilance case or TDP case pending against the candidate.

5) In the case of above officials, posting them in such sensitive posts on their reaching seniority may not be followed in view of pendency of grave charges under Rule 17(b) of Tamil Nad Civil Services (Discipline and Appeal) Rules.

6) Therefore, it is instructed that persons who are facing grave charges under Rule 17(b) of Tamil Nad Civil Services (Discipline and Appeal) Rules should not be given sensitive posts noted in Para 4 (i) ante, on their reaching seniority, in the interest of administration.

7) It was also brought to notice of this office that Tahsildars looking after Talk charge are allowed to continue in the post without any limitation affecting the interest of other Tahsildars who are in the seniority for acting as regular Taluk Tahsildar. This practice is not a healthy one and should be dispensed with.

8) Hence, it is instructed that Tahsildars should not be permitted to hold the post of Taluk Tahsildars for a period of more than one year and they should be transferred on completion of one year tenure except due to statutory requirement (Revision of Electoral rolls etc).

9) In view of the ongoing roll revision, transferring of Taluk Tahsildar who have completed one year may be done on completion of the ban period imposed by the Election Commission of India.

These instructions should be followed without any deviation and a report of compliance submitted.

S K PRABAKAR I A S

ADDITIONAL CHIEF SECRETARY / COMMISSIONER OF

REVENUE ADMINISTRATION




2.12.2023 அன்று கன்னியாகுமரி மாவட்ட புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் மாநில பொருளாளர் சோமசுந்தரம், மாநில துணைத்தலைவர் செந்தூர்ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.




மதுரையில் 9.12.2023 அன்று நடைபெற்ற வைரவிழா ஆண்டு மாவட்ட மாநாட்டில் மாநிலத் தலைவர் எம்பி முருகையன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மதுரை மாவட்ட நிர்வாகிகள்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



23.12.2023 நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாடு மற்றும் மேனாள் மாவட்ட பொருளாளர் கந்தசாமி அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழாவில் பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்



06.12.2023 அன்று நடைபெற்ற ராணிப்பேட்டை மாவட்ட வைர விழா மாநாட்டில் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன் கொடியேற்றினார். உடன் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள்




திருவாரூரில் நடைபெற்ற வைர விழா ஆண்டு மாவட்ட மாநாட்டில் மாநில பொருளாளர் வெ.சோமசுந்தரம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
January 2024

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

28.12.2023 அன்று
சென்னையில் நடைபெற்ற
கோட்டை முற்றுகை போராட்டத்தில்
ஜாக்டோ-ஜியோ மாநில
ஒருங்கிணைப்பாளர் மற்றும்
மாநிலத் தலைவர்
எம்.பி.முருகையன்
உரையாற்றியபோது

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP- 3 / 2015-2017



If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
பழைய எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்பா தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.